செ.வெ.எண்:48 நாள்:25.07.2016

# பத்திரிகை செய்தி

## 2016–ல் நடைபெற உள்ள தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

**தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் :**

அரசு ஆணை எண் (நிலை) எண்.960, கல்வி (இ2) துறை, நாள் 11.10.1991ன்படி, புதுக்கோட்டை வருவாய் மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் (அதாவது கிராமப்புற பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப்) அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2016 —— 2017 ஆம் கல்வி ஆண்டில் தொடர்ந்து 9ம் வகுப்பில் பயிலும் மாணவ / மாணவியர்கள் தமிழ்நாடு ஊரகப்பகுதி திறனாய்வுத் தேர்வு (Trust Examination) செப்டம்பர் 2016 தேர்வு எழுதுவதற்கு தகுதி உள்ளவர்கள்.

இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்களின் பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கும் மிகாமல் இருக்க வேண்டும். வருவாய்த்துறை அலுவலரிடம் வருமானச்சான்று பெற்று வழங்க வேண்டும்.

தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்களின் தேர்வுக்கட்டணம் ரூ.5/- சேவைக்கட்டணம் ரூ.5/- மொத்தம் ரூ.10/- வீதம் இணையதளம் (Online) மூலம் விண்ணபத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்தோடு பள்ளித் தலைமை ஆசிரியர் வழியாக உரிய முதன்மைக்க கல்வி அலுவகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டிய நாள் 01.08.2016 முதல் 08.08.2016 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் 100 நபர்களுக்கு (50 மாணவியர்கள் + 50 மாணவர்கள்) 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் காலத்திற்கு படிப்புதவித் தொகை ஆண்டு தோறும் ரூ.1,000/- வீதம் வழங்கப்படும்.

**குறிப்பு** —— நகராட்சி மற்றம் மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ —— மாணவியர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்க இயலாது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**